மூலமாக சேல்ஸ் டாக்ஸ் கன்செஷனும், பவர் கட்டிலே இருந்து ரிலீஃபும் கொடுக்காத காரணத்தால் மீண்டும் அது மூடப்படக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது என்ற அச்சம் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே அதைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய சார்பிலேயும் நிர்வாகத்தினுடைய சார்பிலேயும் 2, 3 பேர்களை போட்டு ஒரு குழு அமைத்து நடத்துவது எளிதான காரியம். அதிலே ஒன்றும் கஷ்டம் இல்லை. ஆனால் அதை எப்படி தொடர்ந்து நடத்துவது என்பதிலேதான் நிதி பற்றிய பிரச்சினை எழுகிறது. ஏற்கனவே திறந்திருக்கிற ஜாயின்ட்மானேஜ்மெண்ட் ஒன்றிலே அந்த நிர்வாகத்திலே இருந்து 2, 3 பேர்களையும், அரசாங்கத்தின் தரப்பிலே 2, 3 பேர்களையும் தேர்ந்தெடுத்து அனுப்பி குழு ஒன்று போடப்பட்டிருக்கிறது. அது நன்கு நடந்து கொண்டு இருக்கிறது. அதற்காக அரசு சில லட்சங்களைத்தான் செலவிட்டிருக்கிறது. அதற்காக பாங்க் காரண்டியும் கொடுத்திருக்கிறது. எனவே எந்த அளவிலே சிறிய அளவிலே கடன் கொடுத்து சரி செய்யலாம் என்பது பற்றி அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஆனால் பெரும்பாலான ஆலைகளில் பெரிய அளவிலே செய்ய வேண்டியிருப்பதால்தான் அரசு தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்ப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன பிரச்சினைகளை மனத்திலே கொண்டு அரசு தீவிரமாகப் பரிசீலிக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளும்.

[முற்பகல் 11-30]

5 அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.—

(அ) 1983-84-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கையில் (வணிகம்) உள்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) 1971–72 முதல் 1975–76 வரையிலான ஆண்டுகளுக்கான தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1983–84) அளித்த முப்பத்தி ஒன்பதாம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2–3–1987-ஆம் நாளன்று டாக்டர் கே. சமரசம் அவர்களால் ஆளுநர் உரைக்கு நன்றி கூறி முன்மொழிந்த தீர்மானத்திற்கு வரப்பெற்ற திருத்தங்களை உறுப்பினர்கள் மொழிவார்கள்.

திரு. கே. எம். தங்கமணி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

(1) திண்டிவனம், செஞ்சி, வானூர் ஆகிய வட்டங்களில் மழை பொய்த்து விட்டதால், குறிப்பாக திண்டிவனம் வட்டத்தில் உள்ள வீடூர் நீர்த்தேக்கம், 40 பெரிய ஏரிகள், 71 சிறிய ஏரிகளில் கொஞ்சமும் தண்ணீர் இல்லாமல் வறண்டிருக்கிற நிலைமையில் பயிர்கள் கருகிவிட்டபடியால் விவசாயிகள் வாட்டத்தைப் போக்க இப்பகுதிகளை வறட்சிப் பகுதியென அறிவித்து நில வரி வஜா, அரசுக் கடன், கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்யவும், வறட்சி நிவாரணப் பணிகளை உடன் செயல்படுத்துவது குறித்தும்;

(2) மதுவிலக்கு அமுலுக்குப் பின்னரும் உயர்வகை மது பானங்கள் விற்பனையை தடை செய்யாமலும், தமிழகத்தின் எல்லா இடங்களிலும் பெருகி உள்ள கள்ளச் சாராய விற்பனையை தடுப்பது பற்றியும் விஷ மதுவால் அண்மையில் சென்னை, கோவையில் பலர் உயிர்விட்டது குறித்தும்;

(3) திண்டிவனம் நகருக்கு திருவெண்ணெய்நல்லூர் ஆற்றுப் படுகையிலிருந்து செஞ்சி வழியாகத் தண்ணீர் கொண்டு வரும் 12 கோடி ரூபாய் செலவிலான கூட்டுக் குடிநீர் திட்டத்தை உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த வேண்டிய அவசியம் பற்றியும் தற்காலிகமாக நகரில் குடிநீர் வசதி செய்ய 20 இலட்சம் ரூபாய் ஒதுக்குவது பற்றியும்;

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS